பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 51331 தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 2 (17—7—68) புதன் ★ வெளியூர்: ஆடி 3 (18—7—68) வியாழன் [இதழ்: 28

போலீசாருக்கு ரப்பர் தடி!

கொழும்பு, ஜூலை 17—

மரத்தினலான குண்டாந் தடிகளுக்குப் பதில், ரப்பரினலான குண்டாந் தடிகளை இலங்கைப் போலீசார் விரைவில் பெறுவர்!

இது, தடியடிப் பிரயோகத்தின்போது கடும் காயங்கள் ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் என்பதுடன், செலவையும் குறைக்குமாம்.

சீர்திருத்தம் வேறு--புரட்சி வேறு!

சமுதாய மறுமலர்ச்சிக்கு மனப் புரட்சி தேவை!

சட்டம் இயற்றுவது மட்டும் போதாது!

மணல்மேடு மாநாட்டில் தில்லை வில்லாளன் உரை

மாயூரம், ஜூலை 17—

"சீர்திருத்தம் ஏற்பட, மக்கள் மனத்தில் ஒரு புரட்சி ஏற்பட வேண்டும்; அந்த மனப் புரட்சி ஏற்பட்டால்தான் நாட்டில் சீர்திருத்தம் ஏற்படும்; சட்டமியற்றிச் சமுதாயச் சீர்திருத்தத்தைச் செய்துவிட முடியாது

"ஒரு மாளிகை கலனுகி இருக்கிறதென்றல், அந்தக் கட்டிடத்தில் விழுந்த கீறல்களை நீக்கி -- கூரையை மாற்றி — வண்ணத்தைத் திருத்தி — புது மாளிகையாக மாற்றுவது சீர்திருத்தமாகும்; ஆனல் அந்த இடத்தில் வேறு புது மாளிகை அமைப்பது புரட்சியாகும்.

"இவற்றில், 'இந்த நாட்டு மன வளத்திற்குச் சீர்திருத்தமே சாலச் சிறந்தது' என்று முடிவு செய்து, கால நூற்றுண்டாகப் பிரச்சாரத்தின்மூலம் இந்நாட்டு மக்களிடையே சீர்திருத்தம் பரப்பப்பட்டு அதில் வெற்றியும் பெற்றுவருகிறேம்."

இவ்வாறு, மாயூரத்தை அடுத்த மணல்மேட்டில் 12-7-68 அன்று நடைபெற்ற சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தில்லை வில்லாளன் ஆற்றிய உரையில் சுட்டிக்காட்டினர். அவரது உரை வருமாறு:—

"உலகத்தில் சமுதாயம் அமைவது, பலவேறு காரணங்களாலாகும். தனித்தனியாக உள்ள மனித இனத்தவர்—சம்மதத்தினலும் ஒப்பந்தத்தின் மூலமும் தேவை கருதியும், இடத்தையொட்டியும் மொழியினலும் மதத்தின் அடிப்படையிலும் இனத்தின் பெயரிலும் இணைந்து சமூகங்கள் எழுகின்றன.

திராவிடச் சமூகம், உலகத்திலேயே மூத்த -- சிறந்த சமுதாயமாகும். அதனல் நம் சமுதாயத்தை 'கல தோன்ரு காலத்தே முன் தோன்றிய மூத்த குடி' என்று குறிப்பிடுவர்.

இந்தச் சமுதாயத்தின் சிறப்புகள் இடையில் வந்த வேறெரு சமூகத் தொடர்புகளால் சீரழிந்து போய்விட்டன! காணமற்போன அந்தச் சிறப்புகளைத் தேடும் பணியில்தான் திராவிட இயக்கம் சென்ற முப்பதாண்டுக் காலமாகப் பணி புரிந்து வருகிறது. பெரியாரும், நம் அரும் பெருந் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களும் இந்தப் பணியில முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

ஆனல் ஒரு சமுதாயத்தைத் திருத்தியமைப்பது என்றல் இரு வழிகள உண்டு; ஒன்று—சீர்திருத்தம்; மற்ருென்று புரட்சி.

சீர்திருத்தத் திருமணத்தை நாம் துவக்கத்தில், சட்டமியற்றிப் பரப்பி இருக்க முடியாது!

'புரோகித முறை ஆகாது' என்று சட்டமியற்றியிருந்தால் நடந்திருக்காது!

ஆனல், முப்பதாண்டு மனப் புரட்சிகுப் பிறகு, சுயமரியாதைத் திருமணச சட்டம் நிறைவேற்றியபொழுது எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது!

அதுபோலவே, கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள், தங்கப் பதக்கம் பெறுகின்றனர்; இதனைச் சட்டமூலம் செய்ய முயன்ருல் முடியாது.

சமுதாயச் சீர்திருத்தம், 'மனப் புரட்சி முதலில்—சட்டத் திருத்தம் பிறகு' என்ற அடிப்படையிலேயே நடைபெற முடியும்.

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவது சட்டத்தினல் மட்டும் முடியாது. அதுபோலவே, சமூக அடித்தளத்தில் உள்ள ஆதித்திராவிட சமுதாயத்தை வெறும் சட்டத்தினல் மட்டும் உயரச் செய்துவிட இயலாது.

இந்தச் சமுதாயம் முன்னேற முடியாமல் தடுப்பது -- இல்லாமை, கல்லாமை, தீண்டாமை என்ற 'ஆமை'கள் ஆகும்.

இவைகளை விரட்டியடித்தாலன்றி, இந்தச் சமுதாயம் முன்னேற மார்க்கம் இல்லை.

தீண்டாமை இன்று சட்டப்படியான குற்றம்—பெருங் குற்றங்களை, காவல் அதிகாரிகளே கண்டு எப்படி வழக்குப் போடுகிருர்களோ, அத்தகைய குற்ற வரிசையில் அதுவும் ஒன்று; ஆனல், இன்னமும் சில இடங்களில் தீண்டாமை ஒழிக்கப்படவில்லை; காரணம், சட்டம் மட்டும் போதவில்லை -- மக்களின் மனப் பக்குவமும் தேவையாக இருப்பதுதான்!

அண்ணுவின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, இத்தகைய சீர்திருத்தங்களை முதலில் மக்கள் ஏற்கும் அளவில் மனப் பக்குவத்தை ஏற்படுத்தும்; பின், சட்டத்தின்மூலமும் ஆக்கும். அதற்கு, நாட்டிலுள்ள அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அவரவர் தங்கள் தங்கள் துறைகளிலிருந்து உழைத்து, இவ்வரசு நிலைக்க -- நீடிக்கப் பணிபுரியவேண்டும்.

உழவர்—உற்பத்தியைப் பெருக்கியும், ஆலைத் தொழிலாளி—அமைதியாக ஆலையில் பணியாற்றியும், ஆசிரியர்—அரசு ஊழியர்—என்றுள்ள அந்தந்தப் பிரிவினரும், தத்தம் பிரிவில் முன்னேற்றம் காணப் பணியாற்றி, இவ்வரசுக்கு உதவ வேண்டுகிறேன்."

பெருமிதமளிக்கும் தமிழ்ப் பண்பாடு!

ஊனம் அடைந்து வருவதைத் தடுத்துக் காப்போம்!

சென்னை, ஜூலை 16—

"சோவியத் நாடு செல்லும் அமைச்சர் முத்துசாமி அவர்கள், அந்த நாட்டில் பாட்டாளிகளின் அரசை அமைத்த லெனின் அவர்களின் உருவத்தை இன்னும் கெடாமல் பதப்படுத்தி வைத்திருப்பதைப் பார்ப்பார்! லெனினுக்கு அடுத்தாற்போல், சோவியத் நாட்டைக் கட்டிக்காத்த ஸ்டாலினின் உடலும் பதப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட இடத்தைப் பார்ப்பார்; அங்கே ஸ்டாலினின் உடல் இல்லாதது கண்டு பெருமூச்சு விடுவார்! அந்த ஸ்டாலினின் உடலை அகற்றியது குருஷ்ஷேவ் என்பதையும், இப்போது அந்த குருஷேவ் சோவியத் நாட்டின் மூலையில்—எங்கோ ஒரு மூலையில் இருக்கிருர் -- அவர் தப்பித் தவறி வெளியே வருவதுகூட ஒரு செய்தி ஆகிறது -- என்பதையும் அறிந்துகொள்வார்! அது, இரஷ்ய அரசியலின் பண்பாடு!

"இங்கே நம்மை அடிமைப்படுத்தியவன் வெள்ளையன் என்ருலும், 'சில நாகரிகங்களை -- விஞ்ஞான விந்தைகளைக் கற்றுக்கொடுத்தான்' என்பதற்காக, அந்த வெள்ளை இனத்தைச் சார்ந்த மன்னர்களின் சிலைகளை அப்படியே வைத்திருக்கிறேம்!

"நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னும் பின்னும், நம்மை ஏசியும் பேசியும் வருகிற காமராசரின் சிலையை அலுங்காமல் குலுங்காமல் அப்படியே வைத்திருக்கிறேம்! காமராசரின் பிறந்த நாள் விழாவுச்கு வாழ்த்தும் அனுப்புகிறேம்! காங்கிரசிலே மிச்சம் மீதியுள்ள நல்ல காங்கிரசுக்காரர்கள், அண்ணுவின் பிறந்த நாள் விழாவுக்கு வாழ்த்து அனுப்புகிருர்கள்!

"சோவியத் நாடு செல்வம் முத்துசாமி அவர்கள், ஸ்டாலின் உடலை அங்கு காணுதபோது பெருமூச்சையும், நமது தமிழக அரசியல் பண்பாட்டை நினைக்கும்போது பெருமிதமும் அடைவார்!

"தி.மு. கழகத்தைச் சார்ந்தவர்கள் எங்கே சென்ருலும் — எப்போது சென்ருலும் -- எதற்காகச் சென்ருலும், தமிழகத்துப் பண்பாட்டை உயர்த்திக் காட்டும் பணி புரிவார்கள்! ஆனல், நமது தமிழகத்தில் அந்த அரசியல் பண்பாடு கொஞ்சம் ஊனப்பட்டு வருகிறது — பங்கப்பட்டு வருகிறது! அது முழுவதும் அழிந்துவிடாமல் இருக்க, அதைக் கட்டிக் காத்திடும் பணியை நாம் மேற்கொள்ள வேண்டும்!

"'அண்ணு அவர்கள் மேல்நாடு சென்றபோது ஏசிப் பேசியவர்கள் ஆவார்களே காங்கிரசுக்காரர்கள்? நான் செல்லும்போது என்ன பேசுவார்களோ?' என்று அச்சப்பட்டார் முத்துசாமி.

"ஆனல் மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் -- நமது மனச்சாட்சி 'குற்றவாளி' என்று சொல்வதற்கு இடமில்லாமல், உழைத்து உழைத்து உரமேறிப்போய் பொதுமக்களின் ஆதரவுடன் பட்டம் சூட்டிக்கொண்டவர்கள் நாம்!

"தென்காசியில் 23 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற்றிருந்தாலும் நமது வெற்றியை அடக்கத்தோடு கொண்டாடுகிறேம்! ஆனல் காங்கிரசுக்காரர்கள், வெற்றியையும் விழாக்களையும் முன்பே கொண்டாடிவிடுகிருர்கள்; ஏனெனில் இப்போதெல்லாம் வெற்றி விழாக்களையெல்லாம் பின்னல் கொண்டாட முடிவதில்லை!"

--அமைச்சர் மு. கருணநிதி

(வழியனுப்பு விழாக் கூட்டத்தில்)

'செல்லும் இடமெல்லாம் தமிழ் மணம் பரப்புவேன்'

'நமது நாட்டின் சிறப்பை எடுத்துக் காட்டுவேன்'

ரஷ்யா செல்லும் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, ஜூலை 16—

"நான் செல்லும் இடங்களில் நமது தமிழ்நாட்டுச் சிறப்புப் பற்றியும், தமிழ் மொழியின் சிறப்புப் பற்றியும் எடுத்துக்கூறத் தயங்கமாட்டேன்.

"அங்கு நம் நாட்டின் பெருமையை உயர்த்திக் காட்டி, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பை -- செந்தமிழின் சிறப்பை -- அதனுடைய இலக்கியச் சிறப்பை -- மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்துக்கூறி, தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்துவேன்"

என்று, உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் பெருமிதமுடன் கூறினர்.

சோவியத் நாடு செல்லும் அமைச்சர் முத்துசாமி அவர்கட்கு சென்னை 40-வது வட்ட பேராசிரியர் அன்பழகன் படிப்பகத்தின் சார்பில் வழியனுப்பு விழா நடைபெற்றது.

தோழர் மணிவண்ணன் தலைமை வகித்தார்.

பேராசிரியர் க. அன்பழகன், வேலூர் டி. நாராயணன், துணை மேயர் பவளவண்ணன், தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், கணபதி, டபிள்யூ. பி. பி. சுந்தரம், வீராசாமி ஆகியோர் பாராட்டு வழங்கினர்.

அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகம் முன்பு சிறந்து ஓங்கி இருந்த நிலைமையைப் பற்றி விளக்கி--நடுவில் சிறிது காலம் அதன் சிறப்பு மங்கி இருந்ததையும் கூறி--அந்த நிலையை மாற்ற அண்ணு செய்துவரும் முயற்சிகளையும் அவர்களுக்கு விளக்கிக் கூறுவேன்.

'எங்கள் நாட்டைப் போன்ற சிறிய நாடுகள் வளர்ச்சி பெற, முன்னேற்றம் அடைந்த

(4-ம் பக்கம் பார்க்க)

'லாட்டரி'ச் சீட்டு திட்டம்-அமல் நடத்த உத்தரவு

ஆக. 15-ம் நாள் துவங்குகிறது

அக். 14-ல் முதல் குலுக்கல் நடைபெறும்

தமிழக அரசின் திட்டம் பற்றி விளக்கம்

சென்னை, ஜூலை 17—

இவ்வாண்டு தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அரசாங்க லாட்டரிச் சீட்டுத் திட்டத்தை அமுல் நடத்துமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இந்த லாட்டரிச் சீட்டின் முதல் குலுக்கல் 1968 அக்டோபர் 14-ந் நாள் நடைபெறும்.

9,99,999 டிக்கெட்டுகள் அடங்கிய ஒவ்வொரு குலுக்கலுக்கும் மொத்தம் பரிசுத் தொகை ரூ 2.50 இலட்சம் (இரண்டரை இலட்ச ரூபாய்).

முதல் பரிசுக்கு ரூ. 1 இலட்சம் வழங்கப்படும். ஐந்து 2-வது பரிசுகள் உண்டு; இவை ஒவ்வொன்றின் மதிப்பு ரூ. 10,000 (பத்தாயிரம் ரூபாய்).

ஒவ்வொன்றும் ரூ. 1,000 (ஆயிரம் ரூபாய்) மதிப்புள்ள ஐம்பது 3-வது பரிசுகள் உண்டு.

ஒவ்வொன்றும் நூறு ரூபாய் மதிப்புள்ள ஐநூறு 4-வது பரிசுகள் உண்டு.

ஒவ்வொரு சீட்டுக் குலுக்கலுக்கும், அவசியத்திற்குத் தகுந்தவாறு வரிசை டிக்கெட்டுகளை அரசு விற்பனை செய்யும்.

விற்பனை செய்யப்படும் எல்லா டிக்கெட் வரிசைகளும் முதல் குலுக்கலில் பங்கு கொள்ளும்.

ஒரு லாட்டரி டிக்கெட்டின் மதிப்பு ரூ. 1 (ஒரு ரூபாய்).

அவசியம் ஏற்படின் சீட்டுக் குலுக்கும் தேதியை அரசு ஒத்தி வைக்கலாம்; புதிய தேதி பற்றிய தகவல்கள் விரிவாக விளம்பரம் செய்யப்படும்.

முதல் குலுக்கல் சம்பந்தமான டிக்கெட்டுகளின் விற்பனை ஆகஸ்டு 15-ம் நாள் ஆரம்பமாகும்; இந்த விற்பனையை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் துவக்கிவைப்பார்கள்.

எல்லாக் கருவூலங்களிலும் (கஜானாக்கள்) டிக்கெட்டுகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

திட்டத்தின் நோக்கம்

மக்கள் சேமிப்புக்கு ஊக்கம் அளிக்கவும், அந்தப் பணத்தை மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தவுமே இந்த லாட்டரிச் சீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நிதி இலாகா செயலாளரின் அதிகாரத்திற்கு உட்பட்டு, சிறு சேமிப்பு டைரக்டர் இந்தத் திட்டத்தை அமல் நடத்துவார்; அவருக்கு, 'அரசாங்க லாட்டரி சீட்டு டைரக்டர்' என்ற பதவிப் பெயர் வழங்கப்படும்.

மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ, அரசு, சீட்டுக் குலுக்கலை நடத்தும்.

இந்தத் திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் ரூ. 1 கோடி நிகர வருமானம் கிடைக்கும் என்று முதலமைச்சர் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு டிக்கெட்டுக்கும் ஒரு பரிசுதான் உண்டு.

சென்னை நகரின் முக்கியமான இடங்களிலாவது, அரசு அறிவிக்கும் ஏதேனும் ஒரு மாவட்டத் தலைநகரிலாவது சீட்டுகள் குலுக்கப்படும்.

ஒவ்வொரு வரிசை டிக்கெட்டுகளும் தனித்தனியாகக் குலுக்கப்படும்.

இந்த லாட்டரிச் சீட்டு நடத்துவது சம்பந்தமாக, மாநிலம் முழுவதற்கும் பொருந்தும் தனி விதிகளை அரசு வெளியிட்டுள்ளது; இந்த விதிகள் உடனடியாக அமுலுக்கு வருகின்றன.

பின்னர் நடைபெறவிருக்கும் லாட்டரிச் சீட்டுக் குலுக்கல்களுக்கான தேதிகளை அவ்வப்போது அரசு அறிவிக்கும்.

விற்பனைக்காக அளிக்கப்படும் டிக்கெட்டுகளில் குலுக்கல் தேதி இருக்கும்.

மாவட்ட அளவில் இத்திட்டத்தை அமுல் நடத்துவது, மாவட்டக் கலெக்டர்களின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு டிக்கெட்டிலும் குலுக்கல் தேதி—திட்டம் சம்பந்தமாக நிபந்தனைகளடங்கிய அரசின் உத்தரவு—அரசு செயலாளரின் கையெழுத்து ஆகியவை அடங்கியிருக்கும்.

டிக்கெட்டுகளின் பின்பக்கத்தில் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்கும்.

சீட்டுக் குலுக்கல், இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அடங்கிய ஒரு குழுவின் முன்னிலையில் — மேற்பார்வையில் நடக்கும்.

எந்த வரிசையிலும் முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்றவர்கள் தங்களுடைய பரிசுத் தொகையை மாநில லாட்டரிச் சீட்டுத் திட்ட டைரக்டரிடமிருந்து கோர வேண்டும்.

மூன்றுவது, நான்காவது பரிசு பெற்றவர்கள், பரிசு பெற்ற டிக்கெட்டுகளைக் கொடுத்து, மாநிலத்தில் எந்த துணைக் கருவூலங்களிலிருந்து வேண்டுமானாலும் பெறமுடியும்.

அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலம் பொது மக்களுக்கு டிக்கெட்டுகள் விற்கப்படும்.

எல்லாத் துணைக் கருவூலங்களிலும் டிக்கெட்டுகள் விற்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளுக்கு டிக்கெட் விற்பனையும், பொது மக்களுக்கு நேரடி விற்பனையும் குலுக்கல் தேதிக்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே நிறுத்தப்படும்.

ஒவ்வொரு வரிசையிலும் முதலாவது — இரண்டாவது — மூன்றுவது பரிசுகளுக்காகப் பரிசு எண்கள் முழுவதும் குலுக்கப்படும்.

நான்காவது பரிசு சம்பந்தமாக முறை மாறும்; எந்தக் கடைசி நான்கு எண்கள் கொண்ட தொகுதிக்கும், ஒவ்வொரு வரிசையிலும் 100 சீட்டுகள் வீதம் குலுக்கப்படும்.

சீட்டுக் குலுக்கலின்போது, ஒவ்வொரு வரிசையிலும் கடைசி நான்கு எண்கள் கொண்ட 5 தொகுதிகள் சீட்டுக் குலுக்கி எடுக்கப்படும். இவற்றுள் இதிலுள்ள கடைசி எண்களில் முடியும் எல்லாச் சீட்டுகளுக்கும் கடைசிப் பரிசு உண்டு.

விற்பனையாகாத சீட்டுகள்

சீட்டுக் குலுக்கும் நாளன்று விற்பனையாகாமல் அரசின் வசம் இருக்கும் சீட்டுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும்.

ஒவ்வொரு கருவூலங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் இத்தகைய சீட்டுகள் இதற்கென அரசால் நிர்ணயிக்கப்படும் அதிகாரி முன்னிலையில் நாசம் செய்யப்படும்.

இவ்விதம் அழிக்கப்படும் சீட்டுகளின் எண்கள் உடனுக்குடன் மாநில அதிருஷ்டச் சீட்டு டைரக்டருக்கு அறிவிக்கப்படும்; இதனுடன், சீட்டுகள் அழிப்பதற்கான சான்று இதழும் அனுப்பி வைக்கப்படும்.

எந்தச் சீட்டுக் குலுக்கலிலும் விற்பனையாகாத சீட்டுகள் முதல் மூன்று பரிசுகளைப்பெற உரிமை கிடையாது. அப்படி ஏதாகிலும் விற்பனையாகாமல் அழிக்கப்பட்ட சீட்டுகளின் எண்கள் சீட்டுக் குலுக்கும்போது தென்பட்டால், அந்த எண்கள் அப்புறப்படுத்தப்படும்.

விற்பனையாகியுள்ள சீட்டுகள் எண்கள் மட்டும் வரும்வரையில், திரும்பத் திரும்ப குலுக்கல் நடக்கும்.

நான்காவது பரிசு சம்பந்தமாக இந்த முறை பொருந்தாது.

ஒப்புதல் பெற்ற ஏஜெண்டுகள், பொது மக்களுக்கு விற்ற சீட்டுகளிடையிலும் -- விற்பனையாகாமல் அரசிடம் தேங்கிவிட்ட டிக்கெட்டுகளிடையிலும் பரிசுக்குரியவை இருக்கக்கூடும். அரசுக்கு இவ்விதம் விழும் பரிசுத் தொகை அரசு வசமிருந்துவிடும்.

ஒவ்வொரு சீட்டுக்கும் ஒரே ஒரு பரிசுதான் உண்டு. ஒரே நபருக்கு ஒரு பரிசுக்குமேல் அதிகப் பரிசுகள் விழுந்தால், அவற்றுள் அதிகத் தொகை பரிசு மட்டுமே தரப்படும்.

சீட்டுக் குலுக்கிப் பரிசு விழுந்த நாளிலிருந்து நான்கு வாரத்திற்குள் தொகையைக் கோரிப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி எவரேனும் மூன்று மாதங்களுக்குள் பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ளாவிடில், அத்தொகை அரசுக்குச் சேர்ந்துவிடும்.

ஏஜெண்டுகள் நியமனம்

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றிய வட்டாரத்துக்கும், ஒவ்வொரு நகராட்சிக்கும், ஒவ்வொரு மூன்றும் வகுப்பு நகராட்சிக்கும் ஒவ்வோர் ஏஜெண்டு வீதம் நியமிக்கப்படுவர்.

இரண்டாம் வகுப்பு நகராட்சிக்கு 2 ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவர்.

முதல்தர நகராட்சிக்கு 3 ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவர்.

ஏஜெண்டுகளுக்குக் கருவூலங்களில் (ஜானா) சீட்டுப் புத்தகங்கள் வழங்கப்படும்; ஒவ்வொரு புத்தகமும் 20 சீட்டுகள் கொண்டதாக இருக்கும்.

ஏஜெண்டுகள் ரூ. 200 முன்பணம் செலுத்தி ஏஜென்சிக்கு மனுப் போடவேண்டும்; விற்பனையில் 10 சதவிகிதம் கழிவு கிடைக்கும்.

ஏஜெண்டுகள் விற்கும் சீட்டுகளில் எதற்காவது பரிசு விழுந்தால், 10 சதவிகிதம் போனசு தரப்படும்.

சீட்டுக் குலுக்கும் தேதிக்கு 15 நாட்கள் முன்னதாக ஏஜெண்டுகளுக்கு சீட்டுகள் தரப்படும்.

பரிசு பெற்ற எண்கள் பட்டியல் கெசட்டில் வெளியிடப்படும். இது, அதிகாரபூர்வ முடிவு வெளியீடாகக் கருதப்படும்.

ஏஜென்சி பெற விரும்புவோர், ஜூலை 27-ம் நாளுக்குள் மனுப் போட வேண்டும்.

ஆண்டுக்கு ரூ. 200 கோடி அந்நியச் செலாவணி

தோல்பொருள் ஏற்றுமதி மூலம் ஈட்டலாம்

அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 17—

"நம் நாட்டுக்கு அந்நியச்செலாவணியைத் தேடிக் கொடுக்கும் பொருட்களில் தோல் முக்கிய இடத்தை வகிக்கிறது; சென்னைத் துறைமுகத்திலிருந்து மட்டும் ஆண்டுக்கு ரூ. 42 கோடி மதிப்புள்ள தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாம் ஏற்றுமதி செய்யும் வெறும் தோலை வெளி நாட்டினர் பொருட்களாக உருமாற்றி, கோடிக்கணக்கான ரூபாயைச் சம்பாதிக்கிருர்கள்.

"எனவே, நாம் இனிமேலாவது தோலை அப்படியே ஏற்றுமதி செய்யாமல், பொருட்களாக உருமாற்றி ஏற்றுமதி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இப்போது ரூ. 42 கோடி மதிப்புள்ள தோல் ஏற்றுமதியாகும் நிலை மாறி, ரூ. 200 கோடி மதிப்புள்ள தோல் பொருட்கள் ஏற்றுமதியாகும் புதிய நிலை உருவாகும்"

என்று, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'காம்சன்' காலணி விற்பனை நிலையத்தைத் திறப்பு விழாவில் பேசுகையில் விளக்கினர்.

சென்னை சைனுபஜாரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த விற்பனை நிலையத்தை வடநாட்டுத் திரைப்பட நடிகர் திலீப் குமார் திறந்து வைத்தார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் தமது உரையில், திரு திலீப் குமாரைப்பற்றிக் குறிப்பிடுகையில் குறிப்பிட்டதாவது:—

"காட்சிக் கூடத்தைக் காட்சிக்குரியவர் ஒருவர் திறப்பது தான் சாலப் பொருத்தமாகும். இந்த விற்பனை நிலையக் காட்சிக் கூடத்தை இந்தியாவின் சிறந்த நடிகரான திலீப்குமார் திறப்பது பொருத்தமான ஒன்ருகும்."

கடமையை உணர்ந்து கடுமையாக உழைப்போம்!

சென்னை, ஜூலை 16—

"1967 தேர்தலில் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் நம்மை வரவேற்ருர்கள். அதற்கேற்றாற்போல், ஏற்ற பொறுப்பினை—மாற்றுர் தூற்றிருலும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாது, கடமை உணர்வோடு பணியாற்றி வருகின்றோம்!

"அப்படிப் பணியாற்றி வருகின்ற காரணத்தால் நமது அமைச்சர்களில் சிலர்கூட உடல் நலமில்லாது இருக்கிருர்கள்; நமது வேளாண்மைத் துறையமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

"நாட்டின் உணவு நிலை திருப்திகரமாக இருந்தாலும், நமது உணவு அமைச்சரின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

"அதிக நேரம் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் எனது உடல்நிலைகூடச் சற்று பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையில்தான் உங்களிடத்தில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

"அப்படிக் கடுமையான உடல் உழைப்பை நல்கி நாட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்துவந்த காரணத்தால், இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம்! கழக அரசின்

சாதனைகளைத் தென்காசி மக்கள் அலசி ஆராய்ந்து அறிந்த பிறகுதான் இந்த நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிருர்கள்!

"நாட்டு மக்கள் நம்மிடம் நிரம்ப எதிர்பார்க்கிருர்கள; 'இவர்களால் நமது கஷ்டம் தீராதா? நமது குறைகள் எல்லாம் தீர்க்கப்படாதா? இன்னும் நமக்கு நல்வாழ்வு கிடைக்காதா? வேலையில்லாத் திண்டாட்டம் அகலாதா? செல்வம் வளராதா? ஒளிமயமான எதிர்காலம் தோன்றாதா?' என்று மிகவும் எதிர்பார்க்கிருர்கள்.

"நாம் அதற்கேற்றபடி—எந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்று மக்கள் ஆணை பிறப்பிக்கிருர்களோ அந்த முறையில்—இன்னும் நல்ல முறையில் பணியாற்றுவோம் என்று இந்த நேரத்தில் நீங்கள் எல்லாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்."

—முதலமைச்சர் அண்ணா

(சென்னை வெற்றி விழாக் கூட்டத்தில்)

காங்கிரசு 'மாஜி'களின் பொருளற்ற புலம்பல்!

"அறிஞர் அண்ணா அவர்கள், மிகப் பெருந்தன்மையோடு சட்டமன்றத்திலும் சரி—வேறு பல இடங்களிலும் சரி—'காங்கிரசு அரசு செய்த நன்மையான காரியங்களை நாங்கள் தொடர்ந்து நடத்துவோம்; தேவைப்படாத காரியங்களென்ருல், அவைகளைத் தொடர்ந்து நடத்தமாட்டோம்; அவைகளை விட்டுவிட்டு வேறு பாதை செல்லுவோம்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள்.

"காங்கிரசுக்காரர்கள் செய்தார்களே என்பதற்காக இருந்த வயல்களையெல்லாம் தூர்த்து விட்டு — அவர்கள் வெட்டிய வாய்க்கால்களையெல்லாம், அடைத்துவிட்டு—அவர்கள் கட்டிய அணைகளையெல்லாம் உடைத்துவிட்டு — அவர்கள் போட்டிருந்த நீர்த்தேக்கத் திட்டங்களையெலலாம் சுக்குநூறக்கிவிட்டுப் புதிய அரசு, புதிய வயல்கள்—புதிய நெல்—புதிய விளைச்சல்—புதிய அரிசி என்கின்ற தலைகீழ் மாற்றத்தை செய்ய வேண்டுமென்று விரும்பவும் இல்லை—அது எந்த அரசாலும் செய்யக்கூடிய காரியமுமல்ல!

'காங்கிரசு நண்பர்கள், எதை எடுத்தாலும், 'அது நாங்கள் செய்ததல்லவா' என்கிருர்கள்; முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் சொல்கிருர் — இவர்கள் இருபோகம் சாகுபடி செய்வாராளாமே; நாங்களல்லவா வயல்களைச் செப்பனிட்டு வைத்துவிடுப் போனோம்' என்று!

"தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சொல்லுகிருர்—'நானல்லவா ஆடுதுறை-27 கண்டுபிடித்தேன்--காங்கிரசு ஆட்சியல்லவா கண்டுபிடித்தது? என்று!

"இப்படி, தாங்கள் செய்த காரியங்களைச் சொல்லி, 'தாங்கள் மேலும் ஆட்சியில் நீடித்திருக்க வேண்டாமா' என்ற கேள்வியை அதோடு இணைக்கிருர்கள்!

"இவைகளையெல்லாம் செய்தவர்கள், 'எவ்வளவு தவறு செய்தாலும், எவ்வளவு தீங்கு செய்தாலும், தொடர்ந்துதான் நீடிக்க வேண்டும்' என்று ஒரு நியதி இருக்குமேயானல், நமக்கெல்லாம் இன்று தண்ணீர் விடுகின்ற அளவுக்கு மேட்டூர் அணைக்கட்டுத் திட்டத்தைக் கட்டியவெள்ளைக்காரன் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று வாதிடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பைத்தியக்காரத்தனம்—ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டு, அதற்குப் பதிலாக நானூறு தீய காரியங்களைச் செய்பவன் தொடர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

கலைத்துறை--பொழுதுபோக்குக்காக மட்டுமல்ல!

கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் பயன்படவேண்டும்

திரையரங்கு திறப்புவிழாவில் அண்ணா வலியுறுத்தல்

சென்னை, சூலை 16—

"தமிழ் நாட்டின் கலை வளர்ச்சி, அந்தப் பழைய காலத்திலிருந்தே காலத்துக்கு ஏற்றபடி பல்வேறு வகைகளில் மாறி மாறி வளர்ந்து இருக்கிறது; ஆனால், பொழுதுபோக்குச் சாதனங்கள்தான் மாறியிருக்கிறதே தவிர, அவற்றில் உள்ள கலைப் பண்பு மாறவில்லை. படக்காட்சிகளின் தரத்தை உயர்த்த மக்கள் உதவவேண்டும். தரமுள்ள படங்களை ஆதரிப்பதன் மூலம் பட அதிபர்கள் நல்ல படங்களை தயாரிக்க அவர்கள் உதவி செய்யவேண்டும்.

"மக்களின் வேலைத் தொல்லை, மனத்தொல்லை ஆகியவற்றைப் போக்குவதற்குக் கலை உதவுகிறது! மக்களின் உடல் அயர்வைத் தீர்க்க உணவு உதவுவது போல, உள்ளத்தின் அயர்வை நீக்குவதற்குக் கலைகள் உதவுகின்றன! அதற்குத் திரைபடங்கள் பெரிதும் உதவி செய்கின்றன!

"திரைப்படங்களின் மூலம் கல்வியை வளர்க்க முடியும்; ஆனால் துரதிருஷ்டவசமாக நம் நாட்டில் நிலைமை அப்படி இல்லை; இந்த நிலைமையை மாற்றப் பட அதிபர்கள் முன்வர வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை—ஒட்டேரிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் சரவணா திரைப்பட அரங்கை திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்கள்.

திரைப்படம் காட்டும் கருவியை, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை சென்னை மாநகராட்சி உறுப்பினரும் பழைய மேயருமான மைனர் மோசஸ் வரவேற்றார்.

சரவணா தியேட்டரின் உரிமையாளர் ஆறுமுகம் (செட்டியார்) சென்னை தீ விபத்து நிதிக்காக அண்ணா அவர்களிடம் ரூ. 1,001 நிதி வழங்கினார்.

அண்ணாவின் பெருந்தன்மை!

தன் இருக்கையில் கதிரவனை அமர்த்தினார்

சென்னை, சூலை 16—

நேற்று கோடம்பாக்கத்தில் நடந்த தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் அமருவதற்கென்று மேடையின் நடுவில், வேலைப்பாடுகளமைந்த தனி நாற்காலி போடப்பட்டிருந்தது. ஏனைய அமைச்சர்களுக்கும், தலைவர்கட்கும் இருமருங்கிலும் அமர இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அண்ணா மேடைக்கு வந்ததும், அந்தத் தனி நாற்காலியில் அமராமல் பக்கத்தில் இருந்த இருக்கையில் அமரப்போனார்; உடன், 'இதில் வேண்டாம்; அதில் அமருங்கள்' என்று அண்ணாவிடம் சொல்லப்பட்டது; உடனே அண்ணா அவர்கள், 'இந்த ஆசனத்தில் கதிரவனை உட்கார வையுங்கள்' என்று கூறி, மேடையின் கோடியில் அமர்ந்திருந்த கதிரவனை அழைத்து அமரச் செய்துவிட்டு, பக்கத்து இருக்கையிலேயே அமர்ந்திருந்தார் அண்ணா!

இதனையறிந்த கூட்டத்தினர் ஆரவாரம் செய்து, அண்ணாவின் பெருந்தன்மையையும், தொண்டருக்கு அவர் அளிக்கும் மதிப்பையும் பாராட்டும்வகையில் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்!

வனவாசம் சென்றவர் திரும்பி வந்தால்.....

நிச்சயம் தருவார் அண்ணா

ஐந்து தொகுதிகளையாவது காமராசர் பெறுவார்

சென்னை, சூலை 16—

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், தஞ்சையில் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில் ஊழியர் களைப் பார்த்து, 'தி. மு. க. தலைவர்களைத் திட்டக்கூடாது' என்றார். அந்த அறிவுரையை எத்தனை நாளைக்கு அவரே கடைபிடிப்பார் என்பது அவருக்கே புரியாது!

"காமராசர் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் பிறந்த நாளான இன்று, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பது--அதுவும் அறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்திருக்கும் இந்த மேடையில் தெரிவிப்பது--அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அளித்திருக்கும் அரசியல் பயிற்சியையும், பண்பையும், பாங்கினையும்தான் காட்டும் என்று கருதுகிறேன்.

"காமராசர் பிறந்த நாளை முன்னிட்டு இன்று வெளியிடப்பட்ட காங்கிரசு ஏட்டின் சிறப்பு மலரில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது; அதில் 'அரசியல் சூதாட்டத்தில் காமராசர் என்ற தருமர்' தோற்றுவிட்டார்; தருமர் வனவாசம் போனதுபோல் போயிருக்கிறார்; திரும்பவும் அஸ்தினாபுரம் வருவார்' என்று கலை உலக நண்பர் ஒருவர் எழுதியிருந்தார். இராமாயணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த அவர்கள், நாம் பதிலளித்த பிறகு இப்பொழுது மகாபாரதத்திற்குத் தாவி இருக்கிறார்கள்!

"கானகம் சென்ற தருமர், 12 ஆண்டு வனவாசம் முடிந்து துரியோதனனின் தலைநகர்ப் பட்டினமான அஸ்தினாபுரம் வந்து, 'எங்களுக்கு ஐந்து நாடு கொடு' என்று கேட்டார்; துர்க்குணம் கொண்ட துரியோதனன், 'முடியாது' என்று கூறினான்; அதன்பின், ஐந்து ஊர் கேட்டார்; அதற்கும் துரியோதனன், 'முடியாது' என்றான்; இறுதியில், 'ஐந்து வீடாவது கொடு' என்றார்; 'அதுவும் முடியாது' என்று அனுப்பி விட்டான்! அதனால் பாரதப் போர் எழுந்தது!

"அதைப்போல்--அந்தப் பாரதக் கதையில் வருவதைப் போல்--வனவாசத்திலிருக்கும் காமராசர் என்ற தருமர், துரியோதனனைப் போன்ற துர்க்குணம் இல்லாத--பெருந்தன்மையின் பிறப்பிடமான அண்ணா அவர்களிடம் வந்து, எனக்கு ஐந்து நாடு கொடு' என்று கேட்டால், 'இருப்பதே ஒரு நாடு--தமிழ்நாடு; அதை எப்படிக் கொடுக்க முடியும்?' என்பார்; பிறகு, ஐந்து தொகுதிகளையாவது கொடுங்கள்' என்பார் காமராசர்! அப்படிக் கேட்டால், அண்ணா அவர்கள் நிச்சயம் தருவார்! நிச்சயம் போர் நடைபெறாது! 1972-ல் திரும்பி வருகின்ற காமராசர், ஐந்து தொகுதிகளையாவது பெறுவார்!"

--மு. கருணாநிதி

(தென்காசி வெற்றி விழாக் கூட்டத்தில்)

கழக வழக்கறிஞர்கள் இரண்டாவது மாநாடு

கடலூரில் கூடுகிறது

தஞ்சை, சூலை 15—

தமிழக--தி. மு. க. வழக்கறிஞர்களின் இரண்டாவது மாநாடு, ஆகஸ்டு 18-ம் நாள் கடலூரில் நடைபெறவிருப்பதாக மாநாடு அமைப்பாளர் தஞ்சை பா. மாணிக்கவாசகம் பி.ஏ.,பி.எல். அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது:—

மாநாட்டில் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.

இதுவரை பதிவு செய்துகொள்ளாத கழகத்தைச் சார்ந்த வழக்கறிஞர் நண்பர்கள், உடனடியாக, 'திரு. சுந்தரம் பி.ஏ., பி.எல். வரவேற்புக் குழுத் தலைவர், 3, வேணுகோபாலபுரம், கடலூர்-1' என்ற முகவரிக்கு ரூ. 10 அனுப்பி உடனடியாகப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

பாகிஸ்தான் அதிபர் ஓலம்!

இந்தியா போர் ஆயத்தம் செய்கிறதாம்

தனது 'ஆசைக் கனவுகள்' இயலாதவை என அறிந்து புலம்பல்

புதுடில்லி, சூலை 16—

"இதுவரையில் கண்டிராத வகையில் போர் ஆயத்தங்களைச் செய்துவரும் இந்தியாவின் நடவடிக்கைகளைச் சமாளிக்கப் 'பாகிஸ்தான், பலம் வாய்ந்த இராணுவம் ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறது"

என்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், லாகூரில் முஸ்லிம் லீக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசியிருப்பதாவது:—

"இந்தியா போர் ஆயத்துச்காக ரூ. 1,000-கோடிக்குமேல் செலவிட்டிருக்கிறது. இது பாகிஸ்தானுக்கு ஆபத்தான ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறது. இந்தியாவின் இராணுவ ஆயத்தங்கள் சீனாவுக்கு எதிரானவையன்று; அது முழுக்கமுழுக்கப் பாகிஸ்தானுக்கு எதிரானதே ஆகும்.

இந்திய – பாகிஸ்தானுக்கிடையே சமாதானம் நிலவ வேண்டுமானால் காஷ்மீர் பிரச்சினையையும் தீர்க்கவேண்டும்; பராக்கா பிரச்சினையையும் தீர்க்க வேண்டும்; பிரச்சினைகளுக்கெல்லாம் இவை அடிப் படையானவைகளாகும்.

பலம்வாய்ந்த ஜர் இராணுவத்தால் மட்டுமே இந்தியாவின் 'தாக்குதலை'ச் சமாளிக்க முடியும். பாகிஸ்தான் அரசால் இதற்காகப் பெரும் அளவில் பணம் செலவிட முடியாது; எனினும் தனது சக்திக்குட்பட்ட அனைத்தையும் பாகிஸ்தான் செய்யும்.

கிடைக்கக்கூடிய எல்லா இடங்களிலிருந்தும் இந்தியா, நவீன ரக ஆயுதங்களைப் பெற்று, ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு நாடாக உருவாகிவருகிறது. ஆனால், நாம் ஏதாவது ஒரு நாட்டிடமிருந்து ஆயுதங்களை வாங்க முற்படும்போது, அதை எதிர்த்துக் குரலெழுப்பவும், ஆயுதம் தருவதை நிறுத்திவிடவும் முயலுகின்றனர்.

எதிரியின் தாக்குதல் நடவடிக்கையைச் சமாளிக்க, முடியக்கூடிய எல்லா வழிகளிலும் பாகிஸ்தான் செயல்படும்."

இந்தியாவின் இஸ்லாமிய சரித்திரத்தைச் சுட்டிக்காட்டிப் பேசிய அயூப்கான் கூறியதாவது:—

"பேரரசர் அவுரங்கசீப் காலத்திலிருந்தே இந்திய முஸ்லீம்கள் மோசமாக நடத்தப்பட்டுவந்துள்ளனர். அதன் விளைவே, 'பாகிஸ்தான் வேண்டும்' என்ற கோரிக்கை உருவானதற்குக் காரணமாகும்.

இந்திய முஸ்லீம்களின் விலை மதிப்பற்ற தியாகத்தால்தான், பாகிஸ்தானை அடைய முடிந்தது; அதுபோல் இப்பொழுதும் பாகிஸ்தானைச் சக்திவாய்ந்ததாக உருவாக்கவேண்டியது முஸ்லீம்களின் கடமையாகும்."

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சாதனை

புதுடில்லி, சூலை 17—

தேசியக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பிரச்சாரம் பலனளிக்கத் துவங்கிவிட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த மார்ச் திங்களுடன் முடிந்த கடந்த பத்தாண்டுக் காலத்தில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் 2.2 மில்லியன் குழந்தை பிறப்புக்களை இல்லாமல் செய்ய முடிந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

குழந்தை பிறப்பில், இந்தக் குறைந்த எண்ணிக்கை, பெரும் அளவில் 1967–68-ம் ஆண்டில்தான் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ 67.21 கோடியாகும்; அதாவது, பிறக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 306 செலவிடப்பட்டுள்ளது.

"செலவிடப்பட்ட இந்த ரூ. 67 கோடி பிறப்புக்களைக் கட்டுப்படுத்தியதன் மூலம் ரூ. 700 கோடி மிச்சமடைய முடிந்திருக்கிறது" என்று நிபுணர்களின் கணக்குக் கூறுகிறது.

பிறக்காமல் போன ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தபட்சம் ரூ 3,500 செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், சில நேரங்களில் இது ரூ. 21,000 ஆகக்கூட உயர்ந்துவிட்டிருக்கலாம் என்றும், குறைந்தபட்சத் தொகையான ரூ. 3,500 கணக்கிட்டால்கூட பிறக்காமல் போன குழந்தைகளால் மொத்தம் ரூ 700 கோடி மிச்சம் கிடைத்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

பிறக்காமல் போன ஒவ்வொரு குழந்தைக்கும் 1958–59-ம ஆண்டுகளில் ரூ. 759 செலவிட்டிருக்க, இத்தொகை 1967—68-ல் ரூ. 230 தான் ஆகியிருக்கிறது என்ற ருசிகரத் தகவலும் இப்புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவந்திருக்கிறது.

சென்னைவாசிகள் கவனிக்க:

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா?

இல்லையேல் சூலை 27-ஆம் நாளுக்குள் மனுச் செய்க!

சென்னையில் உள்ள 120 மாநகராட்சி வட்டங்களுக்குமான வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் இரண்டு இடங்களில், பொதுமக்கள் பார்வையிடுவதற்காக, பட்டியலின் நகல் வைக்கப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகையிலும் வைக்கப்பட்டுள்ளது. அலுவலக வேலை நேரங்களில் பொதுமக்கள் பார்வையிடலாம்.

இப்பட்டியலில் விடுபட்டுப்போன பெயர்களைச் சேர்க்கவோ, திருத்தங்கள் செய்யவோ, ஆட்சேபம் எழுப்பவோ, அதனதற்குரிய பாரங்களைக் கொண்டு சூலை 27-ஆம் நாளுக்குள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:—'டி. ஆர். இராசகோபாலன், தேர்தல் பதிவு அதிகாரி—வருவாய்த் துறை அதிகாரி, மாநகராட்சி மன்றம், ரிப்பன் கட்டிடம் சென்னை–3.'

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், தவறாது வாக்காளர் பட்டியலைப் பார்வையிட்டு, சேர்க்க வேண்டிய வாக்காளர்களைச் சேர்க்கவும், பிழையிருந்தால் திருத்தவும் ஆவன செய்வது இன்றியமையாக் கடமையாகும்.

பெரியார் கார் நிதிக்கு அறிஞர் அண்ணா

அன்பளிப்பு

அரூர், சூலை 16—

12—7—68 அன்று தர்மபுரி மாவட்டம் அரூரில் நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களது 89-வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் அரூர் நகர--வட்ட தி. க. சார்பில் பணமுடிப்பு ஒன்றை பெரியார் அவர்களிடம் அளித்தார்.

பெரியார் அவர்கள், அண்ணா அவர்களுக்கு அரூர் வட்ட--நகர தி. க. சார்பில் போர்த்திய பொன்னாடையை அரூர் முத்து எம்.பி. அவர்களிடம் கொடுத்து (ஏலம் இல்லாமலேயே) ரூ. 500 பெற்று, அதைப் பெரியார் அவர்களுக்குத் தரவிருக்கும் வசதிமிக்க கார் நிதிக்காக அளித்தார்கள்.

துறைமுகத் தொகுதிச் சீரணியின் பணி

"சென்னைத் துறைமுகத் தொகுதி சீரணித் தொண்டர்கள், கடந்த 19—6—68 முதல் 8—7—68 வரை குடிசைப் பகுதிகளில் இரவு பகலாக தீவிபத்துத் தடுப்புப் பணியில் ஈடுபட்டு மற்றவர்களோடு இணைந்து சிறப்பாகச் செயலாற்றினர்; அவர்களுக்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று, பகுதிச் சீரணித் தலைவர் எஸ். வி. சி. லிங்கம் அறிவிக்கிறார்.

சமுதாய முன்னேற்றத்துக்குக் காங்கிரசார் செய்ததென்ன?

சாதி பேதங்கள் நீங்குவதற்குப் பாடுபடுவது திராவிடர் இயக்கமே!

பெரியார் கருத்தைச் செயல்படுத்த முனைந்துள்ளது அண்ணு ஆட்சி!

மாயூரம் --- மணல்மேடு சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் அமைச்சர் சத்தியவாணிமுத்து சிறப்புரை

"சாதி ஒழியவும், சமூக ஏற்றத்தாழ்வு நீங்கவும், சமத்துவச் சமுதாயம் உருவாகவும் உண்மையிலேயே பாடுபடுவது திராவிடர் இயக்கமாகிய பெரியாரின் சுயமரியாதை இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான். காங்கிரசுக் கட்சியினர், வெறும் பெயரளவிலேயே சமுதாயச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகின்றனர்; நிறைவேற்றிவைத்துள்ள சட்டத்தையும் செயல்படுத்த அவர்களுக்குத் துணிவில்லை—மனமில்லை.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான், தமிழகத்தில் சமுதாய மறுமலர்ச்சிக்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது"

என்று, தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், மாயூரம்--மணல்மேட்டில் நடந்த சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் விளக்கினர். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:—

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்பமே, சமுதாயச் சீர்திருத்த நோக்கம்தான்; திராவிடர் இயக்கப் பாரம்பரியத்தைப் பெற்றுள்ளது தி. மு. க.

திருவள்ளுவர் நெறியும், 'ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வேண்டும்' எனபதுதான்.

பெரியார் இயக்கமான சுயமரியாதை இயக்கம் தேர்தலுக்கு முன்பிருந்தே சமுதாயத் துறையில் பணியாற்றி வந்ததாகும்; பெரியாரின் மூச்சே சமுதாய மாற்றந்தான். அதில் பழகிய தி. மு. கழகம் அரசுப் பொறுப்பேற்றதும், சமுதாயச் சீர்திருத்தத்தில் அதிக அக்கறைகொண்டுள்ளது.

சுயமரியாதை இயக்கம் தோன்றியதே சமுதாயத்துக்காகத்தானே! அதிலிருந்து வந்துள்ள தி. மு. க., தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னேற்றத்தை அளிக்கப் பின்வாங்குமா?

காங்கிரசு ஆட்சியில் இவ்வித நோக்கமே இருக்க நியாயமில்லை;

காங்கிரசு தோன்றியதே, 'இந்தியருக்குப் பதவி வேண்டும்' என்பதற்குத்தான்!

பாகிஸ்தான் தோன்றியதும், முஸ்லீம்களுக்குப் பங்கு கேட்கவேதான்!

டாக்டர் அம்பேத்கார், 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பங்கு கொடாவிடில், முஸ்லிம்களாகி விடுவோம்' என்று சொன்ன பிறகுதான்; 'எங்கு இந்து சாம்ராஜ்யம் பரப்பிலும், பலத்திலும் குறைந்துவிடுமோ' என்று அஞ்சி—தாழ்த்தப்பட்டோருக்கு வகுப்பு விகிதாச்சார உரிமை கொடுத்தார்கள்; காந்தியார், 'அம்மாதிரி கொடுக்கக்கூடாது' என்று பிடிவாதம் காட்டினர்; உண்ணுநோன்பு இருந்தார்; அவருடைய மரணத்தைத் தடுக்கும் வகையில், பூனு ஒப்பந்தம் ஏற்பட்டு வகுப்புவாரி விகிதம் வந்தது.

'எங்கு முஸ்லிம்களாகி விடுவார்களோ' என்று அஞ்சித்தான் தாழ்த்தப்பட்டவர்களைக் காந்தியார் 'அரிசன்' என்று பெயர் அளித்து, 'காங்கிரசில் அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும்' எனறு வற்புறுத்தினர்; 'பதவி பறிபோய்விடுமோ' என்று அஞ்சித்தான் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானம் கொண்டுவந்தனர்!

சாதி ஒழிப்புக்காக இதயபூர்வமாகப் பாடுபட்டது திராவிடர் இயக்கந்தான்! காங்கிரசார் வித்தியாசக் கண்கொண்டு, 'தீண்டாமை ஒழிப்பு' என்றனர்.

பெரியார் அவர்கள்தான் சாதியை ஒழிக்க முன்வந்தவர்; 'திராவிடர்கள், தனிக் கலாசாரம் கொண்டவர்கள்' என்பதை எடுத்துக்காட்டி விளக்கியவர். அவர் இயக்கத்தால்தான் இந்து மதப் பழக்க வழக்கங்களைத் துறந்தோம்; பெயர்களையும் மாற்றி அமைத்துக்கொண்டோம்!

சுயமரியாதைத் திருமணங்கள் இந்து மதச் சடங்கின்றி நடத்தப்படுகின்றன!

'சாதியை ஒத்துக்கொள்ளமாட்டோம்' என்கிருேம்!

சமத்துவக் கொள்கையைக் காந்தியார் ஏற்றுக்கொண்டதனுல்தான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மதத்துக்கு மதிப்பு அளிக்கப்படாமல் மனிதத்தன்மைக்கு மதிப்பு அளித்ததுதானே அவர் சுடப்பட்டதற்குக் காரணம்?

சாதி வெறி, மத வெறி உள்ளவரையில், உயிர்ப் பலியாகத்தான் முடியும்!

அமெரிக்காவிலும் இன வெறி, நிறவெறி போகவில்லை; அதனுல்தான், ஆப்ரகாம் லிங்கன் முதல் கென்னடிகள்வரையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்!

பொருளாதார ஏற்றத்தாழ்வும் நீங்க வேண்டும். எவ்வளவு பெரிய பணககாரராக இருந்தாலும், இழிவைப் போக்க முடியாது.

தாழ்த்தப்பட்டவர்களிலேயே 20 பேர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளனர்; டாக்டர்கள், எஞ்சினீயர்கள் ஏராளமாக உள்ளனர்; இவர்கள், ஆலயத்திற்குள் செல்ல உரிமையுண்டா? ஏதோ, 'அதிகாரிகள்' என்பதற்காக அனுமதிக்கப்படலாம்!

தேநீர்க் கடையில் டீ கொடுக்கவும் மறுக்கிருர்கள்! தனிக்குவளை--தனி இடம் ஒதுக்கும் கொடுமை இன்னும் தீரவில்லையே! மயானத்தில்கூட இடம் கொடுக்க மறுக்கப்படுகிறது! இதற்கெல்லாம காங்கிரசு ஏதாவது செய்ததா? பெயரளவில் சட்டம் செய்து வைத்துக்கொண்டு இருக்கிறது; செயலில், 'கடும் அபராதம் வேண்டாம்—இலேசாக இருக்கட்டும்' என்று உத்தரவிடப்படுகிறது; இப்படிச் செய்தால் தீண்டாமை ஒழிய முடியுமா?

இந்தக் குறைபாடுகளை எல்லாம் கிராமங்கள்தோறும் காணும் காமராசர், காங்கிரசு ஆட்சியிடம் கண்டித்துக் கேட்டதுண்டா?

இதயத்தில் காங்கிரசாருக்கு சமத்துவ எண்ணமில்லை! ஓட்டுக்கு வரும்போதுதான் உணர்வு வருகிறது!

தாழ்த்தப்பட்டவர் முன்னேறவில்லை என்பதுதான் காங்கிரசுத் தோல்விக்குக் காரணம்!

கலப்புத் திருமணங்கள் ஏராளமாக நடக்கவேண்டும்; அப்போதுதான் சாதி ஒழியும்; இது நிறைவேருத சூழ்நிலையே தற்போது இருக்கிறது.

சட்டங்களால் சமுதாயத்தைச் சீர்திருத்திவிட முடியாது; மக்கள் மனமாற்றமடைய வேண்டும்.

சுயமரியாதைத் திருமணங்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. சுயமரியாதைத் எண்ணம் உருவாக வேண்டும்; மக்கள் மனம் தெளியவேண்டும். கலப்பு மணம் செய்துகொண்டவர்கள் கணக்கு அறிய உத்தரவிட்டிருக்கிருேம்.

காந்தியார் நினைவு விழாவில்--அக்டோபரில்--கலப்புத் திருமணங்களுக்குப் பரிசு அளிக்கப்படும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு சிறுதொழில் செய்ய--நடத்தக் கடனுதவி ஒதுக்கப்பட்டுத் தரப்படுகிறது; வட்டி இல்லாமல் கடன் தரப்படுகிறது; இதைச் சரிவரப் பயன்படுத்தி ஆதிதிராவிடர்கள் முன்னேற வேண்டும்."

சென்னை மாநகராட்சித் தேர்தல்

புதிய வாக்காளர் பட்டியல்படி நடக்கும்

சென்னை, ஜூலை 17—

சென்னை மாநகராட்சித் தேர்தல் -- புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ள 120 வட்டங்களை அடிப்படையாகக் கொண்டு --- இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் நடத்துவதென முடிவாகியிருக்கிறது.

மாநகராட்சித் தேர்தலுக்கு, சட்டமன்ற வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படமாட்டாது; தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்தான் பயன்படுத்தப்படும்.

இத்தேர்தலுக்கான பல்வேறு ஏற்பாடுகளும இறுதியாக்கப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள மாநகராட்சியின் பதவிக்காலம், நவம்பர் 1-ம் நாளுடன் முடிவுபெறுகிறது.

செப்டம்பர் 29 அல்லது 30-ம் நாள் தேர்தல் நடைபெறக்கூடும்; திட்டவட்டமான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது செப்டம்பர் 4 அல்லது 5-ம் நாள் இறுதியாக இருக்கும்.

திடீர் மனமாற்றம்?

புதுடில்லி, ஜூலை 17—

சொந்தக் காரணங்களையொட்டித் திருமதி விஜயலட்சுமி பண்டிட், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

காங்கிரசு மாஜிகளின்.....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இருக்கவேண்டும் என்று வாதிடுவது!

"அந்த வாதத்தைத்தான் இன்றையத் தினம் காங்கிரசினுடைய பழைய அமைச்சர்கள்—காங்கிரசுக் கட்சியின் பெருந் தலைவர்கள் நடத்திவருகின்றனர்கள்!"

—அமைச்சர் கருணாநிதி

(மணல்மேடு மாநாட்டில்)

அறிஞர் அண்ணு டெல்லி பயணம்

சென்னை, ஜூலை 17—

முதலமைச்சர் அண்ணு அவர்கள், நாளை டெல்லிக்குப் புறப்பட்டுச் செல்கிருர்; அங்கு நிதிக் குழுவினருடன் விவாதித்துவிட்டு, ஜூலை 20-ம் நாள் சென்னை திரும்புவார்.

தொண்டு புரியும் சாதனமாகவே பதவி!

சென்னை, ஜூலை 16—

"அமைச்சர் பதவியை, தமிழக மக்களுக்குத் தொண்டு புரியும் சாதனமாகத்தான் கருதிப் பணியாற்றுகிருேம்! அதில் ஏதேனும் குறைபாடு இருந்தால், பேராசிரியரைப் போன்றவர்கள் தட்டிக் கேட்கவும், சுட்டிக்காட்டவும் வேண்டும்.

அழகான இரதம் போன்ற கார்—அருமையான வாழ்க்கை, வரவேற்பு — எனும் சுகபோகங்களைப் பெரிதெனக் கருதாமல், நாங்கள் விடுகின்ற ஒவ்வொரு மூச்சிலும்—எங்கள் இரத்தத்தின் ஒவ்வொரு துடிப்பிலும், 'கழகத் தொண்டன்' என்ற உணர்வோடு பணியாற்றுவோம்! தேவைப்பட்டால் எந்த நேரமும் பதவி - பவிசுகளை உதறித்தள்ளிவிட்டு வரக்கூடியவர்கள் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்."

--அமைச்சர் மு. கருணாநிதி

(சென்னை 40-வது வட்டக் கூட்டத்தில்)

நடக்க இருப்பவை

19--7--68

போத்தனூர்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு கேரள வாய்க்கால்பாளையத்தில்; தலைவர்: டி. காளிமுத்து; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., இராதாகிருஷ்ணன், க. மருதாசலம், அ. வெங்கிடுசாமி, இரா. இலக்குமணன்.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு

சென்னை 16-வது வட்டம் ஆசீர்வாதபுரம் வாசாமோடு மாநகராட்சிப் பள்ளியின் துணைக் கட்டிடத் திறப்புவிழா, 18—7—68 மாலை 6 மணிசகு மேயர் அபிபுல்லாபேக் தலைமையிலும்—திரு. டி. பார்த்தசாரதி முதலியார் முன்னிலையிலும் நடைபெறும்; சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா திறந்து வைப்பார்.

இரங்கற் கூட்டம்

நக்கீரர் கழகம் — செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவை சார்பில், பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் பிரிவுக்கு இரங்கற் கூட்டம், 18—7—68 மாலை 6-15 மணிக்கு மன்னடி--பவழக்காரத் தெரு ஏ. ஆர். சி உயர்நிலைப் பள்ளியில் பேராசிரியர் ந. சஞ்சீவி தலைமையில் நடைபெறும்; வித்துவான் மே. வீ. வேணுகோபாலர் மற்றும் பலர் பேசுவர்.

கலை நிகழ்ச்சி

திருவெண்ணெய் நல்லூர் நகர தி. மு. க. சார்பில 19—7—68 மாலை 6 மணிக்கு மெய்கண்டார் மடத் தெருவில்; தோழர் அ. சே. குமாரசாமி தலைமையில், மதுரை கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கண்ணம்மா --- தங்கராசு கலை நிகழ்ச்சிகள்

ஜூலை, 19: திருவெண்ணெய் நல்லூர்; 20: தவுட்டுப்பாளையும் (ரூர்); 21: சித்திலிங்கமடம்; 22: சென்னிமலை மேலப்பாளையம்; 23: விஜயமங்களம்; 24: அனுமன் பள்ளி; 25: குன்னத்தூர்; 28: மதுரை முனிசசாலை ரோடு.

நிகழ்ச்சி விரும்புவோர்:— 33, லெட்சுமிபுரம், 7-வது தெரு, மதுரை—1.

பொதுப் பணி அமைச்சர்

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

ஜூலை 19 மாலை 4-மணி: தெற்குமேடு—மேல்நிலை நீர்த் தொட்டித் திறப்பு விழா; 4-30 மணி: தேவானை — மேல்நிலை நீர்த் தொட்டித் திறப்பு; 5-45 மணி: நெட்டூர்—பாலத்துக்கு அடிக்கல் நாட்டுதல்; 6-45 மணி: ஆலங்குளம் — வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழா; இரவு 8-மணி: தென்காடு—பொதுக் கூட்டம்; 10-மணி: செங்கோட்டை—பொதுக்கூட்டம்.

ஜூலை 20 காலை 8-30 மணி: ஆலடியூர் — பாலத்துக்கு அடிக்கல் நாட்டுதல்; இரவு 10-மணி: அம்பாசமுத்திரம்—மேல் நிலை நீர்த் தொட்டித் திறப்பு.

உள்ளாட்சித் துறை அமைச்சர்

மா. முத்துசாமி

நிகழ்ச்சிகள்

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் 18—7—68 இரவு இரயில்மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு 19—7—68 மாலை சேலம் சென்று, திரு. ஈ. ஆர். கிருட்டினன் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு 20—7—68 காலை சென்னை திரும்புகிருர்.

அமைச்சர் முத்துசாமி சோவியத் பயணம்

சென்னை, ஜூலை 17—

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், ஒரு மாதம் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய இம்மாதம் 21-ம் நாள் புறப்படுகிருர்.

தனி அழைப்பின்மீது மாநகராட்சித் தூதுக் குழுவின் தலைவராகச் செல்லும் அவா, இரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, எகிப்து ஆகிய நாடுகளில் நகராட்சிகள் இயங்கும் முறைகளைக் கண்டறிவார்.

ஜூலை 21-ம் நாள் விமானம் மூலம் டெல்லி செல்லும் அவர், 24-ம் நாள் ரோம் சென்று அங்கிருந்து இரஷ்யா செல்கிருர்; இரஷ்யாவில் 20 நாள் இருந்துவிட்டு—ஜெர்மனியில் 5 நாள் தங்கி—பின்னர் செய்ரோவில் 2 நாள் இருப்பார்; ஆகஸ்டு 22-ம்நாள் சென்னை திரும்புவார்.

இவர் தலைமைதாங்கிச் செல்லும் தூதுக் குழுவில் மாநகராட்சி மேயர் அபிபுல்லா பேக், மாநகராட்சி தி. மு. க. தலைவர் வி. முனுசாமி, மாநகராட்சி காங்கிரசுக் கட்சித் துணைத் தலைவர் ஜி. உமாபதி, முஸ்லிம லீக் உறுப்பினர் சிலார் மியான் ஆகியோர் இருப்பர்.

செல்லும் இடமெல்லாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரஷியா போன்ற நாடுகளின் பொருளாதார உதவி தேவை' என்பதை அவர்களுக்கு விளக்குவேன்.

தமிழ்நாட்டுக்கும்--இரஷ்ய நாட்டுக்கும் இடையே உள்ள பொருளாதாரத் தொடர்பு--இலக்கியத் தொடர்பு கலை தொடர்பு ஆகியவற்றைப் பற்றியும் விளக்குவேன்.

அந்த உறவுகளை மேலும் பலப்படுத்தத் தேவைப்படும் முயற்சிகளிலும் ஈடுபடுவேன்.

அவர்களின் வளர்ச்சிக்குக் காரணமான திட்டங்களை--ஊராட்சி பற்றிய அவர்களின் செயல் திட்ட முறைகளைக் கூர்ந்து கவனித்து, அவற்றைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவது குறித்துத் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெறுவது.